# மில்க்வைற் செய்தி
# Milk White News

தபாற்பெட்டி இல. 77 யாழ்ப்பாணம். தொலைபேசி: 7233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ ஆடி 1980 ★ இதழ் - 55





## குளப் பொருக்கும் வயல் வளமும்

வயல்களுக்கு வாய்ப்பான இயற்கை உரம் குளப்பொருக்கு என்று நாம் சொல்லித்தான் நீங்கள் அறியவேண்டியதில்லை. தமிழ்நாட்டு வேளாண்மை நிபுணர் வானொலியில் அறிவுறுத்திவரும் பாடத்தில் இதுவும் ஒன்று.

நாம் ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான மண்வெட்டிகளையும், இருப்புத் தாச்சிகளையும் இரவலாக வழங்கிச் சனசமூக நிலையங்களை வேண்டிக்கொள்வது உங்கள் அயலிடங்களில் உள்ள குளங்களைப் பதியுங்கள், தோண்டுங்கள், பொருக்குளடுங்கள் என்பது தான். இவர்களோடு உழவர்களும் சேர்ந்தால் வயலும் வளம்பெறும் - குளமும் நீர் நிறையும். குளங்களில் நீர் நிறைந்தால் அயலிடங்களில் இணற்றுநீர் அதிகமாவதோடு உவர்த்தன்மை நீங்குவதுமாகும். சுற்றுடல் பசுமையுள்ளதாகும். குளந் தோண்ட விரும்புவோர் எங்கள் உதவிக்கு விண்ணப்பிக்கவும்.





அளவெட்டி அருணோதயக் கல்லூரியின் சின்னப்பு நூலகத் திறப்புவிழாவில் மில்க்வைற் தொழிலதிபர் கல்லூரி அதிபரிடம் பல நூல்களை அன்பளித்தார்.

★ நல்லதைச் செய்வது தெய்வத்தைத் தொழுவதற்கு நிகர் ★

உ
சிவமயம்






## திருநாவுக்கரசுநாயனர் தேவாரம்

திருப்பேரெயில்

திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

கணக்கி லாரையும் கற்றுவல் லாரையும்
வணக்கி லாநெறி கண்டுகொண் டாரையும்
தணக்கு வார்தணிப் பாரெப் பொருளையும்
பிணக்கு வாரவர் பேரெயி லாளரே.

திருச்சிற்றம்பலம்

திருப்பேரெயில் என்னுந் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவன், கல்லாதவரையும், கற்றவர்களையும், வணங்கத் தெரியாத வினைஞரையும் அவரவர் தன்மையில் தணித்து அருள்புரிந்து எல்லாப் பொருள்களையும் ஒடுக்கி மீளத்தோற்றி நடத்துவர்.

### திருப்பேரெயில் இறைவன்

வேதம் ஓதுபவர் மான்குட்டியை ஏந்துபவர், நீலகண்டத்தவர், கபாலம் கைக்கொண்டவர் எல்லாம் வல்லவர், வெண்ணீறு பூசியவர் பிறையைச்சூடியவர். மழையைத் தருபவர், சந்திரசூரியருக்கு ஒளியூட்டுபவர். முப்புரங்களை எரித்தவர் தீர்த்தங்களை மிகுவிப்பவர் புண்ணியவாவிகளை உண்டாக்கியவர். வினைதீர்ப்பவர் நல்வினைப்பயனை ஊட்டுபவர். அவரை அன்பர்களன்றி மற்றவர் அறியமாட்டார்கள். அவர் தூநெறியாளர் மழுவாளை ஏந்தியவர் ஐந்துதலைப்பாம்பை அரையிலசைத்தவர். உமையம்மையாரைப் பாகம்கொண்டவர்; வேதம் முதலானவற்றால் ஏத்துவார் குறைகளைப் போக்குபவர்; மிகப்பழையவராகிய அவர் முருகப்பெருமானின் தந்தை. புதியவருள் புதியவர்; அழுது தொழுது ஆடிப்பாடி உருகும் அன்பர் அடியவர்தம் பிழைகளைப் பொறுத்தருள்புரிபவர். மன்மதனின் ஆற்றலை வாட்டியவர். இசைப்பாட்டோடு கூத்துவகைகளை ஆடி அவற்றை வளர்த்தவர். அருச்சுனனுக்கு அருள்செய்தவர். மாவலியிடம் மாணியாய் வந்த மகாவிஷ்ணு, நான்முகன் ஆகியோர் வழிபட எழுந்தருளியவர். இராவணனின் செருக்கை நீக்குவதற்கு அவனை அடக்கியவர். அருள்புரிந்தவர்.




## மருந்து

### நோயைத் தீர்க்கும் மருந்து

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்

மருந்து செய்யும்போது, நோய் இன்னது என்பதை அறிந்து, அந்நோய்க்குக் காரணம் இன்னதுதான் என்பதை ஆராய்ந்து தெளிந்து, அதனைத் தீர்க்கும் வழியையும் அறிந்து அதனைப் பிழையறச் செய்தல் வேண்டும்.

### MEDICINE

Find out the nature of the disease, its cause and the manner of curing it and then do what is possible.

### நோயும் மருந்தும்

நோய் என்னும் பிணி பலவகைப்படும்; அவற்றுட் சில பழவினையால் வருவன அவற்றைப் பற்றித் திருவள்ளுவர் இங்கே பேசவில்லை. அவர் வேறு காரணங்களால் வரும் நோய்களைப் பற்றியே பேசுவர். சித்தர்கள் நோயணுகா விதிகள் என்றே பாடல்கள் பாடியுள்ளார்கள்;

திருவள்ளுவர் மருந்தென ஒன்று வேண்டாம் என்பர். ஒருவன் முன்வேளை உண்ட உணவு நன்றாகச் சமியாடாயிற்று என்று அறிந்தபின் மறுவேளை உண்பானுயின் அவனுக்கு உணவால் நோய் உண்டாகாது என்பர். தான் உண்ணும் உணவை அளவோடு உட்கொள்ளுதல் வேண்டும். அளவறிந்து உண்டால் நீண்டகாலம் வாழலாம்; நன்றாகப் பசித்தால்தான் உண்ணல்வேண்டும். உடம்புக்கு ஒத்த உணவுவகைகளையே உண்ணல்வேண்டும். உணவைக் குறைத்து உண்பது நல்லது. காலம் அறிந்து உண்ணுதல் முறையாகும். உடம்பின் நிலையை அறிந்து உண்ணுதல் என்றும் நன்மை தரும்.

நினையாப்பிரகாரம் நோய்வந்தால் அதைத் தீர்க்கும் வைத்தியரின் கடமை மிகப்பெரிது. வைத்தியப் பெரியார் நோயாளியின் நிலையையும் நோயின் நிலையையும் மருந்து கொடுக்கும் காலத்தையும் அறிந்து தக்கபடி கொடுத்தல் வேண்டும். மருந்து என்பது நோயாளி, நோய் தீர்க்கும் மருத்துவன், நோய்க்குக் கொடுக்கும் மருந்து, மருத்துவனுக்குத் துணைநிற்பவர் ஆகியநான்கு பகுதிகளை உடையது.


---

எனக்கு அடக்கமான நிலையிலிருந்தே புதிய பாதை திறந்து கிடக்கின்றன.

— ஆஸ்கார் ஒயில்ட்

---

★ உன்னை நிந்திப்பவன் உன்னைத் திருத்த உதவுகிறன் ★



## பஞ்சதந்திரம்

இரண்டு நாக்குகள் கொண்ட பாம்பின் வாயும் ஆங்காரமும் நிஷ்டூரமும் கொண்ட துஷ்டனின் வாயும் தீமை தருதற்கென்றே அமைந்தவை.

போக்கிரி நம்மைப் புகழ்ந்தாலும் அவனையும் அவன் புகழையும் நம்பலாகாது.

தீப்பொறி சந்தனக் கட்டையிலிருந்து பிறந்தாலும் சுடுதலைச் செய்யும். நல்லவன் பெரியவன் வீட்டுப் பிள்ளையும் போக்கிரியானால் போக்கிரியே.

பிறர் குற்றங்களை நுணுகி ஆராய்ந்து, தன் குணத்தைமட்டும் புகழ்ந்துகொள்கிறவர் பேச்சை நம்புதற்குத் தயங்கவேண்டும்.

கல்வியும் நேர்மையும் உள்ளவன் நட்பை நாம் நாடிப் பெறுதல்வேண்டும் கல்வியுள்ளவன் மூர்க்கனாயிருந்தால் எச்சரிக்கையுடன் இருத்தல்வேண்டும். நேர்மையுள்ளவன் மூடனாயிருந்தால் அனுதாபம் காட்டல்வேண்டும். முட்டாளாயும் மூர்க்கனாயும் இருப்பவர்களை அறிந்து தூரத்தே ஒதுங்கிவிடல் வேண்டும்.

பெண்ணின் காதலைப் பெறுகிறவனைப் பெறாதவன் தூஷிக்கிறான். நேர்மையுள்ளவனைத் துஷ்டன் தூஷிக்கிறான். வேலை செய்பவனைச் சோம்பேறி தூஷிக்கிறான் தர்மம் செய்பவனை உலோபி தூஷிக்கிறான். அழகுள்ளவனைக் குரூபி தூஷிக்கிறான். ஞானமுள்ளவனை முட்டாள் தூஷிக்கிறான்.

மூடன் பண்டிதனை வெறுக்கிறான். ஏழை பணக்காரனை வெறுக்கிறான். பாபி புண்ணியவானை வெறுக்கின்றான். விபசாரி கற்புள்ளவளை வெறுக்கிறாள். குணமும் தோஷமும் சேர்க்கையைப் பொறுத்தவை. நல்ல இடத்திலிருந்து வரும் காற்றும், அசுத்த இடத்திலிருந்து வரும் காற்றும், படிந்துவந்த இடத்தைக் காட்டுகின்றன.

### கல்வியின் பயன்

ஒரு காட்டுப்பக்கத்தில் ஒரு கிளி இரண்டு முட்டைகளிட்டு அவற்றிலுண்டான குஞ்சுகளை வளர்த்து வந்தது. அது இரைதேடப்போனபோது அவ்வழியாற் சென்ற வேடன் அவற்றைப் பிடித்துச் சென்றபோது வழியில் ஒன்று தவறி விழுந்துவிட்டது. பின்னர் அவ்வழியால் சென்ற முனிவர் அதனை எடுத்துச் சென்றார்.

ஒருநாள் அரசன் ஒருவன் வேட்டையாடச் சென்றபோது வேடர் குடிசை வழியாகச் சென்றான். அவனைக் கண்டதும் ஒரு கிளி கோபத் தொனியோடு "அவனைப் பிடியுங்கள் கட்டுங்கள் குத்துங்கள் கொல்லுங்கள்" என்று குரல் எழுப்பிற்று. அரசன் அஞ்சி வேறுபக்கமாகச் சென்றான். அவன் சென்ற வழியிலே ஒரு ஆச்சிரமம் இருந்தது. அங்கே வாழ்ந்த கிளி ஒன்று அவனைக் கண்டதும், "பிரபுவே! வாருங்கள். இங்கே இளைப்பாறுங்கள். சிரமபரிகாரம் செய்யுங்கள். பழங்கள் உண்டு. நல்லநீர் உண்டு வாருங்கள். உங்கள் வருகை நல்வரவாகுக" என்றது.

இரண்டு கிளிகளும் பேசப் பயின்றன. பேசின பேச்சுகள் குணமும் குற்றமும் சேர்க்கையைப் பொறுத்திருந்தன.

அரசே! நீ வாழ்க. நின் நாடு வாழ்க! நின் தர்மம் நின் மக்கள் வாழ்க என்பதும் நாக்கு. ஆளுங்கட்சி வீழ்க, முதலாளி வீழ்க, பணக்காரர் வீழ்க, படித்தவர் வீழ்க என்று கத்துவதும் நாக்கு. இந்த நாக்கு காகத்துக்கு அஞ்சி ஒதுங்கி மறைந்திருக்கும் எலும்பில்லாத ஒரு சிறிய மாமிசத் துண்டு.

நாவுக்கு அணிகலம் மௌனம்

## அடுக்கு மொழி

நிலவளம் நீர்வளம்
நினைவிலும் கனவிலும்
நீட்டி நிமிர்த்தி
நீட்டி நிமிர்ந்து
நீட்டி நெளித்து
நீதி நேர்மை
நுங்கு நுரை
நுடங்கி மடங்கி
நெளிவு குழைவு
நெளிவு சுளிவு
நேரம் காலம்
நேரும் சீரும்
நைந்து நலிந்து
நைந்து நைந்கு
நொந்து நொந்து
நோயும் நொடியும்
நோயும் பாயும்

## பண்டத்தரிப்பில் வைத்தியசாலை

அமெரிக்க மிசனரிமார் யாழ்ப்பாணத்தில் செய்த சேவைகளுள் வைத்திய சேவையும் ஒன்று. மிசனரிமார்களில் முன்னோடிகளில் ஒருவராகிய வைாநிநி ஸ்கடர் என்பார் பண்டத்தரிப்பில் 1820 இல் ஒரு வைத்தியசாலை நிறுவி அங்கே தங்கியிருந்து நோயாளிகளைக் கவனித்து நோய்நீக்கஞ் செய்துவந்தார்.

★ தன்னை வென்றவன் உலகத்தை வென்றவனவன் ★



## சைவசமய குரவர் இருவர் குருபூசை



சைவசமயகுரவர் எனப் போற்றப் பெறும் நால்வர் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர், திருநாவுக்கரசு நாயனர், சுந்தரமூர்த்தி நாயனர், மாணிக்கவாசக சுவாமிகள் எமக்கு உய்வைத் தரவல்ல வழிகாட்டிய உத்தமர்கள் உயர்ந்தவர்கள். முத்தமிழையும் பக்தி நெறியையும் பழவினைகளைப் பாறச்செய்யும் வகையினையும், பரமனடி தோயும் உய்தியையும் எமக்கு உணர்த்தியவர்கள், வாழ்ந்து காட்டியவர்கள்.

நால்வர் பெருமக்களுள் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனரதும், திருநாவுக்கரசு நாயனரதும் குரு பூசைத் தினங்கள் மே மாதத்தில் நிகழ்ந்தன. இம் மாதம் மாணிக்க வாசக சுவாமிகள் தினமும், சுந்தரமூர்த்திகள் தினமும் நிகழவுள்ளன. இருவரும் அந்தணப் பெரியார்கள். இருவரும் அனப்பரிய திருமுறைகளை அருளியவர்கள் இருவரும் வடமொழி வல்லுநராயிருந்தும் எமக்காகச் செந்தமிழில் பாடியருளியவர்கள இருவருக்கும் சிவபெருமான் மானுட வடிவந்தாங்கி எழுந்தருளிவந்து அவர்தம் இளமைப்பருவத்திலேயே திருவருள் செய்து பாடவைத்தவர்.

சுந்தர மூர்த்தி நாயனர் பாடியருளிய ஆயிரத்துக்கும் அதிகமான திருப்பாடல்கள் ஏழாம் திருமுறையாக அமைந்துள்ளன. மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய ஆயிரத்துக்கும் அதிகமான பாடல்கள் எட்டாம் திருமுறையாக அமைந்துள்ளன.

### வண்ணை வைத்தீஸ்வரன் கீர்த்தனைகள்

ராகம்: ஆனந்தபைரவி தாளம்; ஆதி

பல்லவி

வண்ணை வைத்திஸ்வரனைக் கண்டேனடி சகியே
எண்ணமெலாம் அவன்பால் இழுத்ததடி — காதல்

அனுபல்லவி

கண்ணைக் கவரும் எழில் கட்டழகன் அவனே
மண்ணை விண்ணாக்கிய மகாதேவனும் சிவனே

சரணம்

அன்புருவானவன் ஆனந்தபைரவி
இன்ப மனேகரன் இறையவன் மறையவன்
துன்ப மகற்றிடும் தூயவன் தாயவன்
தன்பக்கம் இழுத்திடும் தையல்நா யகிநாதன் (வண்

இயற்றியவர்:
இயலிசைவாரிதி யாழ்ப்பாணம் என். வீரமணிஐயர்

## வழக்கிலுள்ள வடமொழிகள் சில..

| | | |
|---|---|---|
| தகனம் | — | எரித்தல், சுடுதல் |
| தகரவித்தை | — | திருக்கூத்தின் தன்மை |
| தகித்தல் | — | எரித்தல் |
| தக்ஷிணயனம் | — | தெற்குவழி |
| தசமி | — | பத்தாம்நாள் |
| தசாங்கம் | — | பத்து உறுப்பு |
| தசாவதாரம் | — | பத்துப்பிறப்பு |
| தசை | — | ஊன் |
| தடத்தலக்கணம் | — | பொதுவியல்பு |
| தடாகம் | | பொய்கை, குளம் |
| தக்ஷிண மூர்த்தம் | — | குருவடிவம், தென்முகக் கடவுள் |
| தட்சணை | — | காணிக்கை |
| தண்ட நீதி | — | கட்டளைச் சட்டம் |
| தண்டனை | — | ஒறுப்பு |
| தண்டாயுதம் | | தடி |
| ததாஸ்து | .... | அப்படியேயாகுக |
| ததி | .... | தயிர் |
| தத்தம் | .... | கொடுத்தல் |
| தத்துவ சாஸ்திரம் | .. | மெய்ப்பொருள் நூல் அறிவு நூல் |

## சுகவாழ்வு

ஏழை பணக்காரர், பண்டிதர் பாமரர், முதலாளி தொழிலாளி எல்லோரும் விரும்புவது எது அது சுகவாழ்வு ஒன்றே. மற்றைய வசதிகள் வாய்ப்புகள் செய்காரியங்கள் எல்லாம் அமைந்தும் சுகவாழ்வு அமையாவிட்டால் அவற்ருலாம் பயன் எதுவு மில்லை.

மருத்துவத் துறைக்கே மதிப்புவாய்ந்த செயலை மந்திகை மருத்துவமனையினர் 25-5-80 அன்று செய்து காட்டினர். அன்று மனநல சங்கத்தைப் புனரமைப்புச் செய்ததோடு சுகவாழ்வு என்னும் சஞ்சிகையை வெளியிட்டு இலவசமாக விநியோகித்தனர். அதில் இருபதுக்கு மேற்பட்ட கட்டுரைகளும் அறுபதுக்கு அதிகமான ஆலோசனைகளும் உள்ளன இத்தகைய சஞ்சிகையை வழங்கும் மந்திகை மருத்துவமனையார் வாழ்க. இதனை மகப்பேற்று மருத்துவப் பேராசிரியர் கலாநிதி A. சின்னத்தம்பி அவர்கள் வெளியிட்டு முதற்பிரதியைத் தொழிலதிபர் மு. பொ. வீரவாகு அவர்களிடம் வழங்கினர் மந்திகையில் தங்கியிருப்போர் வழிபாடு செய்வதற்காக அமைத்து வரும் கோயிலின் கலசத்தை உபகரித்த மில்க்வைற் தொழிலதிபரின் சேவையை வைத்தியர்கள் பெரிதும் பாராட்டினர்கள்.

இலக்கியமே உயிராகவும், எழுத்தே சுவாசமாகவும் கொள்பவன் கலைஞன்.

— ஆஸ்கார் ஒயில்ட்

★ தியாகமில்லாத சமயவாழ்வில் எதுவித பயனுமில்லை ★



# ஔவை அருந்தமிழ்

## 6. மூவேந்தருக்கும் ஓலை அனுப்பியது

தமது புரவலனும் சிறந்த வள்ளலும் சிற்றரசனுமாகிய பாரியின் பெண்களுக்குத் திருமணஞ் செய்துவைத்தல் தம் தலையாய கடமை என்று ஔவையார் கருதினார். அக்காலத்தில் திருக்கோவலூரைத் தெய்வீகன் என்னும் சிற்றரசன் அரசாண்டுவந்தான். அவன் மணமாகாதவன் இளைஞன். ஔவையாரிடம் பணிவன்புள்ள உத்தமன்.

இத்தகைய மன்னனுக்கு அங்கவை, சங்கவை இருவரையும் திருமணஞ் செயலாம் என ஔவையார் கருதினார். கடுவெழி நடந்து மன்னனைக் கண்டார். மணவிழாவைப்பற்றிப் பேசினார் மன்னன் ஔவையாரின் வார்த்தைக்கு மறுவார்த்தை கூறத் துணியவில்லை. ஆனால் வலிமைமிக்க மூவேந்தரும் பாரியை வெறுத்திருந்தவராகையால், பாரியின் பிள்ளைகளைத் தான் மணஞ்செய்வதை விரும்பமாட்டார்கள் எனக்கருதினான். இதை வெளிப்படையாகக் கூறவும் அஞ்சிய தெய்வீகன் ஔவையாரிடம் தன் நிலைமையை மெல்ல மெல்ல உரைத்தான்.

அப்படியானால் முடிமன்னர் மூவரையும் இங்கே வரவழைத்து மணவிழாவை அவர்களைக்கொண்டே செய்விப்பதானால் நீ சம்மதம்தானே என்று ஔவையார் கேட்டார். அதைக்கேட்ட தெய்வீகன் தங்கள் சித்தம் என்பாக்கியம் என்றான். ஔவையார் மூவேந்தருக்கும் மணவோலை அனுப்புவதற்கு ஆயத்தஞ் செய்தார். மூன்று பாடல்களை எழுதினார்.

காவிரிப்பூம் பட்டினத்தைத் தலைநகராகக்கொண்டு காவிரிநதியின் நீர்ப்பெருக்குள்ள தேசத்தையுடைய சோழ மன்னனே! திருமணஞ் செய்துவைப்பது தகாது என்று கருதி அங்கே சிரித்துக்கொண்டிராதே; காவல் அமையப் பெற்ற திருக்கோவலூர்க்கு இற்றைக்குப் பதினெட்டாவது நாள் காலை விரைந்து வருவாயாக.

புகார்மன்னன் பொன்னிப் புனலுடன் சோழன்
தகாதென்று தானங் கிருந்து — நகாதே
கடிதின் வருக கடிக்கோவ லூர்க்கு
விடியப் பதினெட்டா நாள்.

வைகைநதித்துறைக்கு அதிபனாகிய மதுரையில் வீற்றிருக்கும் பாண்டியனே! திருமணஞ்செய்துவைப்பது தகாது என்று நினைத்து மனம் வாட்டமடையாமல், திருமணப்பெண்களுக்கு வேண்டிய பரிசுப்பொருள்களையும் கொண்டு இன்றைக்குப் பதினெட்டாம் நாள் காலையில் நல்ல மனத்தோடு இங்கே வருவாயாக.

வையைத் துறைவன் மதுரா புரித்தென்னன்
செய்யத் தகாதென்று தேம்பாதே — மையலுக்கு
வேண்டுவன கொண்டு விடியலி லொன்பானும்
ஈண்டு வருக விசைந்து.

சேரநாட்டினருக்குத் தலைவனாகிய சேரமன்னனே! பாரியின் புதல்வியராகிய அங்கவை என்பவளையும் சங்கவை என்பவளையும் ஒரேநேரத்தில் திருமணஞ் செய்துவைப்பதற்கு சோழனும் பாண்டியனும் மனமிசைந்துள்ளார்கள். ஊளப்பமும் வளப்பும் பொருந்திய திருக்கோவலூர்க்கு நீ அஞ்சாது வருவாயாக.

சேரலர்கோன் சேரன் செழும்பூந் திருக்கோவல்
ஊரளவுந் தான்வருக வுட்காதே — பாரிமகள்
அங்கவையைக் கொள்ள வரசர் மனமிசைந்தார்
சங்கவை யையுங் கூடத்தான்.

# சென்ற நூற்றாண்டில் வட்டுக்கோட்டை செமினாரி

அமெரிக்க மிசனரிமார் நிறுவிய வட்டுக்கோட்டைச் சாத்திரசாலை, சர்வகலாசாலையைப் போலப் பலவித கலைகளையும் திறமையாகக் கற்பித்துவந்தது. அது 1823ஆம் ஆண்டு தொடக்கம் 1855 வரையும் 700 வித்தியார்த்தி மாணவர்களை உருவாக்கி உபகரித்தது. அவர்கள் தமிழ் சமஸ்கிருதம், ஆங்கிலம் முதலிய மொழிகளிலேயன்றித் தருக்கம், கணிதம், வானசாஸ்திரம், அங்காதிபாதம், கெமிஸ்தம் முதலிய துறைகளிலும் நிபுணராயினர். சென்னைச் சர்வகலாசாலை 1857ஆம் ஆண்டில் முதன்முதல் B.A. பரீட்சை வைத்தபோது அதில் திறமையாகச் சித்தி பெற்றவர் சி. வை. தாமோதரம்பிள்ளை, கரல் விசுவநாத பிள்ளை என்பவராவர்.

இவர்களேயன்றி யோண் சங்கரப்பிள்ளை, உவில்லியம் சின்னத்தம்பி, ஹென்றி மாட்டின், "நெவின்ஸ்" சிதம்பரப் பிள்ளை, ஆனல்ட் சதாசிவம்பிள்ளை, எட்வேட்ஸ் கனகசபைப்பிள்ளை, உவைமன் கதிரவேற்பிள்ளை, லைமன் சரவண முத்துப்பிள்ளை, மோசேஸ் வேலுப்பிள்ளை, இனாக் கணபதிப்பிள்ளை, அம்பலவாணபிள்ளை, தம்பித்துரை முதலானோரும் இன்னும் பலரும் இங்கே கற்றுத்தேறியவராவர்.

# அருள் விருந்து

ஆதாரம்: தர்மசக்கரம்

கீர்த்தியில் மகிழ்பவன் ஆத்மாசாதனத்தை இழக்கிறான்.
அருளைத் தேடுபவன் அதை இழப்பதில்லை.
தேட்டங்களுள் சிறந்தது நல்லொழுக்கம்.
நல்ல உள்ளம் இனிய முகமாக மாறுகிறது.
அகமகிழ்ச்சி ஆயுளை வளர்க்கிறது.
தற்பெருமை கொள்பவன் வீரனாவதில்லை.
தர்மயுத்தம் என்றும் தோல்வியடைவதில்லை.
அதிஷ்டத்தை நம்பியிருப்பவன் மடையன்.
தன்குற்றத்தை மறைப்பவன் இரட்டைக் குற்றவாளி.
நிறைந்த மனிதனிடம் நேர்மை மிளிருகிறது.
மெய்க்காட்சியைக் காமம் கலைத்து விடுகிறது.

★ தன் குற்றத்தை மறைப்பவன் மேலும் குற்றஞ் செய்கிறான் ★



# ஆறுமுகநாவலர் வழியில் தத்துவப் பேராசிரியர் ஒருவர்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் ஞானபரம் பரையில் சிவாசாரியர்கள், தம்பிரான் சுவாமிகள், சித்தாந்த சரபங்கள், மகாவித்துவான்கள் உருவாகித் தொண்டு புரிந்த வழியில் சைவம் வளர்க்கும் பெரியார்கள் எங்கள் நாட்டிலும், தமிழ்நாட்டிலும், மலேசியா முதலான கடல்கடந்த நாடுகளிலும் வாழ்கின்றார்கள். நாவலர் நல்வழிக்கு ஒளியூட்டுகிறார்கள்.

திருமயிலை ஜெம்புலிங்கம்பிள்ளை, பழநி ஈசானசிவாசாரிய சுவாமிகள் நாவலர் அபிமானிகள். தேவகோட்டை தற்புருஷ தேசிக சுவாமிகள் நாவலர் மீது பேரபிமானங் கொண்டவர்கள். தமிழ் நாட்டவர் பலருக்கு நாவலர் என்றால் என்ன என்று வாழ்ந்துகாட்டி விளக்கிவருபவர்.

சென்னைப் பல்கலைக்கழகத்துத் தத்துவத்துறையில் துணைப் பேராசிரியராய் வீற்றிருக்கும் கலாநிதி வை. இரத்தினசபாபதியவர்கள் திருமுறைகளின் தெளிவே சிவஞான போதம் எனப் பேசுபவர் பேசிக் கலாநிதிப் பட்டம் பெற்றவர் இவர். அம்மா, அப்பா என்று பேச்சுப் பழகிய காலத்திலேயே ஆறுமுக நாவலரின் ஓரெழுத்துச் சொற்கள், ஈரெழுத்துச் சொற்கள், மூவெழுத்துச் சொற்களைப் பேசிப் பயின்று, நாவலர் பால பாடங்களில் பாண்டித்தியம் பெற்றவர்கள்.

நாவலரின் வாக்கியங்களிலமைந்த தத்துவப் பொருளை மணிக்கணக்காகப் பேசுபவர்; தம்மை உருவாக்கிய ஞானத் தந்தை நாவலரேயானமையால் தமது தந்தையர் நாடு இலங்குகின்ற இலங்கை என்னும் ஈழத்திருநாடு என்றும் உவகையோடு போற்றுபவர்.

நாவலர் எழுதிய நீதி வாக்கியங்களுக்குத் தத்துவக் கருத்துக் கூறுவதோடு, அவரின் இரண்டு நிமிடக் குட்டிக் கதைகளுக்கும் தத்துவம் விரிப்பவர். முட்டாளை வழித்துணையாகக் கூட்டிப் போன செட்டியார் கதை ஏரிக்கரை மேலே போன சந்நியாசி செம்படவனோடு உரையாடிய கதை, சேடப்பிள்ளையின் நான்கு பிள்ளைகளின் செயல்களை அறிந்த குருவானவரின் கதை இவற்றில் பொதிந்துள்ள தத்துவம் பெரிது.

ஆணவம் நன்மை செய்வது போலக் கெடுதி செய்தமை முட்டாளின் மூடச்செய்கையாகும். என்றும் பிரவித்துவரின்றும் எவரையும் கரையேற்றத் தெரியாத சந்நியாசி செம்படவனின் வேலைஒழுங்கை உணர்ந்தார் என்றும் பொருள்விரிக்கும் போது தத்துவம் வரண்ட பண்டமல்ல அதுவாழ்க்கைக்கு விளக்கம் எனத் தெரிகிறது.

மீன் பிடிப்பவனைப் பார்த்து நீ எப்போ கரைஏறுவாய் என்று கேட்க அவன் என் பறி நிரம்பினால் கரை ஏறுவேன் என்றான். அவன் வேலை முடிந்தால் தான் கரையேறுவானே தவிர, மணிக்கூட்டைப் பார்த்து வேலையை முடிப்பவனல்லன் அவன் கர்மமே அமைந்த கர்மயோகி ஆனால் சந்நியாசியோ என்றால் நிஷ்காமியம் பேசி நேரத்தைப் போக்குபவர். முத்திக்குப் போகிறவரைக் கரையேற்ற மாட்டாதவர். ஆனால் கர்மயோகி செயல் முடியும்வரை வேலை செய்பவன்.

(தொழிலதிபர் சண்முகலிங்கம் அவர்களும், சைவப் புலவர் கந்தசாமி அவர்களும் எடுத்தபெரு முயற்சியால் தத்துவப் பேராசிரியர் ஒருவாரகாலம் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து அரிய விரிவுரைகளையும் தொகுப்புரைகளையும் வழங்கினார் இவர்களின் முயற்சி வளர்வதாக.)

## தொகையகராதி நான்கு

**இறைவன் தேவிமார்**
உமை, விஷ்ணு, காளி, துர்க்கை

**ஈகை வகை**
புகழ், புண்ணியம், நட்பு, நிட்காமியம்

**யுகம்**
கிருத, திரேத, துவாபர, கலி

**உட்கருவி**
மனம், புத்தி, சித்தம், அகங்காரம்

**உணவு**
உண்டல், தின்னல், நக்கல், பருகல்

**வருணம்**
பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர்

**உபய மாதங்கள்**
ஆனி, புரட்டாதி, பங்குனி, மார்கழி

**உபய ராசிகள்**
மிதுனம், கன்னி, தனுசு, மீனம்

**உப வேதங்கள்**
ஆயுள்வேதம், அர்த்தவேதம், தனுர்வேதம், காந்தர்வவேதம்

எனக்கு எதையும் உள்ளக் கசிவோடு கொடுத்து உதவி செய்பவர்கள் ஏழைகள் என்பவரே. சிறிது செல்வம் படைத்தவர்களே பிறருக்குக் கொடுத்து உதவுபவர்கள். பெரும் பொருள் கொண்டவர்கள் பேராசை மிக்கவர்கள். பிறருக்கு ஒன்றும் தராதவர்கள்; — ஆஸ்கார் ஒயில்ட்

★ விருப்பத்தோடு செய்யும் வேலை சுலபமானதாகும் ★

மூலிகை மர்மம்:




## நாயுருவி

வீதிகள் ஒழுங்கைகளின் ஓரங்களில் வேலியருகிலும் மரங்கள் செடிகள் இவற்றுக்கு இடையிலும், புதர் களின் நடுவிலும் உண்டாகி மூன்று அடியுயரம் வரை வளர்ந்திருக்கும் இச்செடி வரட்சியைத் தாங்கிநிற்கும்.

இதன் தண்டு பருமனாகவும் சாம்பர் நிறமுள்ளதாக வும் இருக்கும். கணுக்கள்தோறும் இலைகள் இரண்டிரண்டாக இருக்கும். இதில் கரும்பச்சை, வெண்பச்சை ஆகிய நிற பேதங்கள் உள்ளன. இச்செடியின் பூக்கள் நெற்கதிர் போல் மேல்நோக்கி வளர்ந்து வளைந்திருக்கும். அதில் எமது ஆடைபட்டால் அதன்மணிகள் ஆடையில் ஒட்டிக் கொள்ளும்.

நாயுருவிக்கு மருத்திப்போறி என்றும் மஞ்சரி என் றும் பெயர்கள் வழங்குவதுண்டு. இது அற்பப் பூண்டாகத் தோன்றியபோதிலும் எத்தனையோ விதமாக எமக்குப் பயன்படுகிறது. சிறந்த மூலிகை என்று சித்தவைத்தியர்களும் ஆயுர்வேத மருத்துவர்களும் வெகுவாகப் போற்றுகிறார்கள். மரணத்தைத் தடுக்கும் அற்புத மூலிகை என்று மருத்துவர் குறிப்பிடுவர்.

இளம் நாயுருவித்தண்டு கறிசமைக்க உதவும். இத னால் பல்விளக்குதலும் உண்டு. இது சாயம் செய்யவும் உபயோகப்படுகிறது. மருந்துக்கும் பயன்படுகிறது. பல் வலிக்கு நாயுருவி இலைச்சாறு நல்ல மருந்து.

### நாயுருவி இலை

பொதுவாக நாயுருவியிலை கபம், மேகம், பேதி, மூலம், மந்தம், மூல உதிரம் முதலியவற்றைப் போக்கும் சமிபாட்டுச் சக்தியை உண்டாக்கும்.

வெள்ளை நாயுருவி துவர்ப்பாக இருக்கும். உஷ்ண வீரியம் உள்ளது. கரும் பச்சையான இனம் துவர்ப்புடன் காரத்தன்மையும் உள்ளது. இது புண்களை ஆற்றும். கொழுப்பு, இருதயநோய், வயிற்றுப்பொருமல் முதலிய வற்றை நீக்கும். நாயுருவி இலைச்சாற்றில் தைலம் வடிக் கிறார்கள். இதனால் செவிட்டுத்தன்மை நீங்கும். தேள், நொந்தி கடிகளுக்குச் சிறந்த மருந்தாகும்.

### நாயுருவி வேர்

பொதுவாகக் குடிநீர்ச் சரக்குகளில் ஒன்றாகக் குறிக் கப்படும் இதன்வேர் அரிய மூலிகை. இதனால் வசிய முண்டாகும் என்பர். இது கடுப்பு, உதிரவாதம், குன் மம், சூதகவாய்வு முதலியவற்றைப் போக்கும். புகை போடுவதற்கும் இது உபயோகப்படும்.

### நாயுருவி விதைகள்

நாயுருவி மணிகளை இடித்துப் பொடியாக்கி உட்கொண்டு வந்தால், நுரையீரல் சம்பந்தமான நோய்கள் நீங்கும். பசி தீரும்.

### சமூலம்

இளம் நாயுருவி இலைகள் தண்டு முதலியவற்றை மிளகுடன் அரைத்து உட்கொண்டுவந்தால் மூலநோய் நீங்கும், மாதரின் சூதக அழுக்கும் போம் என்பர்.

---

## வஜனாம்ருதம்

(ஸ்ரீமத் கெங்காதரானந்தா)

உன் குற்றம் மற்றவர் குற்றமாவதில்லை; குற்றத்தை உணர்ந்தால் திருத்துவதும் திருந்துவதும் எளிது.

அழியவேண்டியது அழியும்போது அதனைப் பார்த்துத் துயரம் கொள்ளலாகாது.

வாழ்க்கை உரிமைகளுக்குரிய சம சந்தர்ப்பம் மனித னுக்கு மாத்திரமன்று, விலங்கினத்திற்கும் இருக்கவேண் டும். அதைப் பகிர்ந்தளிக்கும் தேசந்தான் தர்மதேசம்.

இராவணன், கம்சன், துரியோதனன், சூரன் போன்ற வர்களுக்குத் தண்டனைக்குப் பின்னர்தான் பாவமன்னிப் புக் கிடைத்திருக்கிறது.

மனம் எப்பொருளில் கலந்திருக்கிறதோ அப்பொரு ளின் வடிவம் கொள்ளும்.

மனதை அறிவினாலும் அப்பியாசத்தினாலும் தன்வசப் படுத்தத் தெரிந்தவனுக்கு வாழ்க்கை சுவைமிக்க விளை யாட்டாகும். மனதை ஆத்மாவில் லயம் செய்து நிறுத் தும் நிலைதான் மனோலயம், மனவொடுக்கம், மனநாசம் மனதைக் கடந்தநிலை என்றெல்லாம் சொல்லப்படுகிறது.

---

## சிவக்கவிமணியும் பெரியபுராணமும்

சிவக்கவிமணி என்று பெயர்பெற்ற சுப்பிரமணிய முதலியார் இளமைக்காலந் தொடக்கம் பெரியபுராணத் தில் ஈடுபாடுடையவர். அவர் தமக்குப் பெரியபுராணத் தில் பைத்தியம் என்று கூறுபவர். அவர் பெரியபுராணத் துக்கு மிகப்பெரிய அகலவுரை எழுதியதோடு அதில் பல ஆராய்வுகளும் செய்துள்ளார்; அன்றிச் சென்னைச் சர்வ கலாசாலையில் அதனை மூன்று தினங்கள் நீண்ட பிரசங்க மாகவும் பேசியுள்ளார். பின்னர் தமது வழக்கறிஞர் தொழிலிலிருந்து ஓய்வுபெற்றுச் சம்பந்தசரணாலய சுவாமி கள் என்னும் தீட்சா நாமத்தோடு துறவுபூண்டு பெரிய புராண வாழ்வை மேற்கொண்டு சேக்கிழார் செம்மணித் திறன் என்னும் பெரியபுராணத் திரட்டினையும் தயாரித் துள்ளார். எல்லாவற்றையும் துறந்து வாழ்ந்த அவர் பெரியபுராணத்தைத் துறக்கமாட்டாமல் வாழ்ந்தார் என நாம் கருதக்கூடியதாக அவர் வாழ்ந்தார்.

---

அன்பை உண்மையாக நீ எதிர்பார்த்து நின்றால் உனக்காக அன்பும் காத்துக்கொண்டிருக்கும்.

ஆஸ்கார் ஒயில்ட்

---

★ அகத்தில் இனிமையுடையவனுக்குப் புறமெல்லாம் இனிது ★



*Indian Heroes and Heroines*

# BISHMA

— **Swami Sivananda**

Bhisma was a great Hero. He was a very wise man. He was just, righteous, and truthfull. He did what he said and said what he meant to do. He was a great Bramachari.

His father was king Santanu. His mother was Ganga, He renounced his kingdom to please his father. He made a great sacrifice for the sake of filial duty.

He died at his will. He gave spiritual instructions to king Yuthishthira lying on the bed of sharp arrows. He was a saintly warrior.

## உங்களுக்குத் தெரியுமா?

**இலங்கையில் எந்த ஆண்டில் நிகழ்ந்தது என்று**

| | | |
|---|---|---|
| 1. | ஐந்துசதத்தோடு உலகஞ் செல்லும் போஸ்றகாட் வந்தது | 1891 |
| 2. | வெள்ளைக்காரர் 10 சத வெள்ளிப் பணம் விநியோகித்தது | 1892 |
| 3. | கொழும்பு தொழில் நுட்பக்கல்லூரி ஆரம்பம் | 1893 |
| 4. | அபினைத் தடைசெய்ய 28,000 பேர் கையொப்பமிட்டமை | 1894 |
| 5. | சட்டமாணவர் மன்றம் ஆரம்பமானது | 1894 |
| 6. | கொழும்பில் மின்சாரவெளிச்சம் வந்தமை | 1895 |
| 7. | ஆறுசத முத்திரையோடு இங்கிலாந்துக்குத் தபால் | 1898 |
| 8. | தபாற்காரர் 30-40 மைல் நடந்து தபால் விநியோகம் செய்தமை | 1896 |
| 9. | பாய்க்கப்பல் மூலம் தபால் விநியோகமானது | 1800 |
| 10. | ஆசியாக்கண்டத்திலேயே முதல்முதலாக இலங்கை மெயில் | 1832 |
| 11. | நாவலர் பிரசங்கம் செய்த சிவன்கோயில் கட்டப் பெற்றது | 1790 |
| 12. | பிரித்தானிய முறையில் இலங்கை உள்ளூராட்சியமைவு | 1865 |
| 13. | பண்டாரவன்னியன் ஆங்கிலேயர் பலரைக் கொன்றமை | 1797 |
| 14. | கண்ணசாமி ஸ்ரீவிக்கிரமராசசிங்கன் என முடிசூடியமை | 1798 |
| 15. | ஆங்கிலேயர் முத்துசாமியை மன்னனுக்க முயன்றமை | 1803 |
| 16. | பறங்கியர் விதித்த பூணுர வரி ஆங்கிலேயரால் நீக்கப்பட்டது | 1806 |
| 17. | சைவாலயங்கள் பூசையுரிமை பெற்று விழாக்கோலம் பூண்டது | 1807 |
| 18. | இலங்கையரசியல் முறை முற்றாக நீக்கப்பட்டமை | 1815 |
| 19. | யாழ்ப்பாணத்தாரின் அபிமானத்துக்குரிய டைக் மாகாண அதிபரானது | 1829 |
| 20. | இறப்பர்த் தோட்டம் மலைநாடுகளில் ஆரம்பிக்கப்பட்டது | 1890 |




## 1980 யூலை மாத நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 2- | புதன் | — | மடுமாதா திருநாள் |
| 8- | செவ்வாய் | — | ஏகாதசி விரதம் |
| | | | கார்த்திகை விரதம் |
| 9- | புதன் | — | பிரதோஷ விரதம் |
| 11- | வெள்ளி | — | அமாவாசை விரதம் |
| 15- | செவ்வாய் | — | மாணிக்கவாசகர் குருபூசை |
| 16- | புதன் | — | தமிழ் ஆடிப்பிறப்பு |
| 17- | வியாழன் | — | மாவிட்டபுரம் கொடி |
| 21- | திங்கள் | — | சுந்தரமூர்த்திகள் குருபூசை |
| 23- | புதன் | — | ஏகாதசி விரதம் |
| 25- | வெள்ளி | — | பிரதோஷ விரதம் |
| 27- | ஞாயிறு | — | பூரணை விரதம் |
| 29- | செவ்வாய் | — | முன்னேஸ்வரம் கொடி |

யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு, தி. நாகரத்தினம், யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் "சிவநெறிப்புரவலர்" க. கனகராசா ஜே. பி. அவர்கள்
கௌரவ ஆசிரியர்; க. சி. குலரத்தினம் 1-7-80